

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.1.2025) தமிழ்மொழி தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள மொழிப்போராட்டத்தின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்துறந்த திருவாளர்கள் தாளமுத்து நடராசன் ஆகியோரின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.1.2025) தலைமைச் செயலகத்தில், புதிதாக பதவி உயர்வு பெற்றுள்ள இந்திய காவல் பணி அலுவலர்கள் – ச.மணி, சு.செல்வகுமார், மருத்துவர் ம.சுதாகர், எஸ்.ஆர்.செந்தில் குமார், திருமதி ஜா.முத்தரசி, கா.பெரோஸ்கான் அப்துல்லா, இரா.சக்திவேல், திருமதி ஜி.நாகஜோதி, மு.இராசராசன், திருமதி சு.விமலா, து.பெ.சுரேஷ் குமார், வி.பாஸ்கரன், டி.சண்முக பிரியா, சீ.ஜெயக்குமார், எ.மயில்வாகனன், திருமதி ஹ.ஜெயலட்சுமி, ப.சுந்தரவடிவேல், திருமதி கோ.உமையாள், ச.சரவணன், முனைவர் த.செந்தில்குமார், பி.மகேந்திரன், திருமதி க.சுப்புலட்சுமி, ப.இராஜன், ச.செல்வராஜ், கோ.ஸ்டாலின் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்று, குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். உடன் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் உள்ளனர்.

### சிவகங்கை மாவட்டம் – காரைக்குடி – பொய்யாவயல் பள்ளியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த

# மாணவனின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 26-**

**சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, பொய்யாவயல் அரசு உயர்நிலைப் பள்ளியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த மாணவனின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், பத்தரசன் கோட்டை கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் சக்தி சோமையா (வயது 14) த/பெ. கைலாசம் என்ற மாணவன் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், பொய்யாவயல் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு பயின்று வந்த நிலையில் 24.01.2025 அன்று பிற்பகல் பள்ளியின் மின்சார வயர்களில் ஏற்பட்ட மின்சார கசிவினால் எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த மாணவன் சக்தி சோமையாவின் உயிரிழப்பு அவரது குடும்பத்தினருக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்த மாணவன் சக்தி சோமையாவின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த மாணவனின் குடும்பத்தினருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில்

# தி.மு.க. வேட்பாளர் வெற்றிக்கு வல்லரசு பார்வர்டு பிளாக் ஆதரவு!

## நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாவாசி அறிக்கை!

*மதுரை, ஜன. 26-*

அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாவாசி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

13.01.2025ம் தேதி அன்று மதுரை, நியூ ராஜா ரெஸ்ட் ஹவுசில் அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் நிறுவனர் தலைவர் பி.என்.அம்மாவாசி தலைமையில் மாநில பொதுச் செயலாளர் பா.சந்திரசேகரன் முன்னிலையில் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. தமிழர் திருநாள் புத்தாண்டு வாழ்த்து பொங்கல் நன்னாளில் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது..

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் சந்திரகுமார் வெற்றிக்கு வல்லரசு பார்வர்டு பிளாக் ஆதரவு தெரிவிப்பதோடு வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க அயராது பாடுபடுவது.

வல்லரசு பார்வர்டு பிளாக் கோரிக்கையை ஏற்று பாப்பாபட்டியில் உள்ள மேல்நிலை பள்ளிக்கு பி.கே.மூக்கையாத்தேவர் பெயர் சூட்டப்படும் என அறிவித்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்படுகிறது.



ஆளுநர் ரவி தமிழக ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஏஜெண்டாகச் செயல்பட்டு அரசமைப்புச் சட்ட எதிரியாகவும் உள்ளதை வன்மையாக கண்டிப்பதுடன் மத்திய அரசு ஆளுநரை திரும்பப் பெற வேண்டுமென வலியுறுத்துகிறது.

அண்ணா பல்கலைக் கழக மாணவி வழக்கில் உடன் குற்றவாளி கைது செய்யப்பட்டதோடு சட்டமன்றத்தில் பெண்களின் பாதுகாப்புக்கு அரணாக நின்று பாலியல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்க தனி நீதிமன்றம் அமைத்ததற்கு பாராட்டுகள்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மாநில அமைப்புச் செயலாளர் மதுரை கனகு, சென்னை கருப்பத்தேவர், மனோகரன், திருமங்கலம் கருப்பசாமி, விக்கரமங்கலம் மாயத்தேவர், செல்லச்சாமி மற்றும் பலர் பங்கேற்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




வேலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான அனைத்து துறைகள் ஒருங்கிணைந்த சிறப்பு முகாம் காட்பாடி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து அடையாள அட்டை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணைத் தலைவர் சரவணன், மண்டல குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் கருணாகரன், சி.ரவி, மாவட்ட கவுன்சிலர் கிருபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் – சமூக நலத்துறை

# அமைச்சர் பி.கீதாஜீவன் உதவியாளர் த.கருணாநிதி மறைவு!

## கழக முன்னணியினர் – தோழர்கள் அஞ்சலி!

*தூத்துக்குடி, ஜன. 26 -*

தூத்துக்குடி மாவட்டத்தின் திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் ஒன்றியச் செயலாளர் டி. தங்கபாண்டியன் அவர்களின் மகனும், தூத்துக்குடி மாவட்டத்தில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய “கலைஞரின் முரட்டுப் பக்தன்” என். பெரியசாமி அவர்களின் உதவியாளராகவும், தற்போதைய தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான திருமதி. பி.கீதாஜீவன் அவர்களின் அரசியல் உதவியாளராகவும் பணியாற்றி வந்த த.கருணாநிதி (எ) கருணா, (வயது 54) நேற்று (25.1.2025) அதிகாலை திடீரென மாரடைப்பின் காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு கழக உடன்பிறப்புகள் தங்களது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.



அன்னாரது இறுதி ஊர்வலம் தூத்துக்குடி கே.டி.சி. நகரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து நேற்று மாலை 4 மணி அளவில் புறப்பட்டு இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிவேந்தர் கா.வேழவேந்தன்

**ஜனவரி 26 (2022)**



**கல்வி கற்கும் பருவத்திலேயே மிகச் சிறந்த கவிஞராகவும், தலைசிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் விளங்கியவர்.**

**இவரது ‘வேழவேந்தன் கவிதைகள்’ என்ற நூலினை பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டு, அவரது பாராட்டைப் பெற்றவர்.**

**“கவிவேந்தர் கா.வேழவேந்தன் என் உடன்பிறப்புக்களில் ஒருவர் என்கிறபோது உவகை உதடுகளில் மட்டும் பூத்திடவில்லை – என் உள்ளத்திலும் கூடப் பூத்துக் குலுங்குகிறது” என கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**பத்தாண்டுகள் கும்மிடிப்பூண்டி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்ததோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்தவர்.**

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### ஒன்றிய அரசைக் கண்டித்து

# குடியரசு தினத்தில் பஞ்சாப், அரியானா மாநிலங்களில் திட்டமிட்டபடி விவசாயிகள் போராட்டம்!

## ஒரு லட்சம் டிராக்டர்களுடன் பங்கேற்கின்றனர்!

*புதுடெல்லி, ஜன. 26 -*

ஒன்றிய அரசைக் கண்டித்து பஞ்சாப், அரியானா மாநிலங்களில் திட்டமிட்டபடி ஒரு லட்சம் டிராக்டர்களுடன் பேரணி நடைபெறும் என விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை சட்டபூர்வமாக்குவது உள்ளிட்ட 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஆண்டு முதல் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். பஞ்சாப், ஹரியானா எல்லையான கனோரியில் 50 நாட்களுக்கும் மேலாக விவசாய சங்க தலைவர் ஜக்ஜித் சிங் தல்லேவால் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இதையடுத்து கிட்டத் தட்ட ஓராண்டிற்கு பிறகு, ஒன்றிய அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளது.

இதனிடையே போராட்டத்தை தீவிரப்படுத்தும் விதமாக குடியரசு தினத்தன்று அறிவிக்கப்பட்ட டிராக்டர் பேரணி திட்டமிட்டபடி நடைபெறும் என்று விவசாய சங்க தலைவர் சர்வான் சிங் பாந்தர் அறிவித்துள்ளார்.

பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் உள்ள பா.ஜக அலுவலகங்கள், வணிக வளாகங்கள் முன்பு ட்ராக்டர்கள் நிறுத்தி வைக்கப்படும் என்றும் இந்த போராட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட டிராக்டர்களுடன் விவசாயிகள் கலந்து கொள்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### குடியரசு தின அணிவகுப்பு! கண்காணிக்க

# 2000 சி.சி.டி.வி. கேமிராக்கள் பொருத்தம்!

*புதுடெல்லி, ஜன. 26 -*

டெல்லியில் இன்று 76 வது இந்திய குடியரசு தின விழா அணிவகுப்பை ஒட்டி, உச்சகட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அசம்பாவிதங்களை தடுக்க வெள்ளை நிற ரசாயன பொடி எங்கேனும் தூவப்பட்டிருந்தால், எச்சரிக்கை செய்ய காவல்துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

76வது குடியரசு தின விழா நாடு முழுவதும் இன்று கொண்டாடப்பட உள்ளது. குடியரசு தினத்தை ஒட்டி டெல்லியில் அணிவகுப்பு மரியாதை நடத்தப்பட உள்ளதை ஒட்டி, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குடியரசு தினத்தை முன்னிட்டு நாடாளுமன்றம் அமைந்துள்ள விஜய் சவுக் முதல் செங்கோட்டை வரையிலான அணிவகுப்பு பாதையில் சுமார் 2 ஆயிரம் சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பிற்காக இந்த முறை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோடம்பாக்கம் தே.மு. சிவலிங்கம்

**சனவரி 26 (1965)**



**சிறுவயது முதலே தமிழ்ப்பற்றுடன் விளங்கிய இவர், தனது பகுதியில் இருந்த டாக்டர் தருமாம்பாள் மன்றத்தில் உறுப்பினராக இருந்தார்.**

**இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழகமே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த மொழிப் போராட்ட காலத்தில், தான் தீக்குளிப்பதற்கு முதல்நாள், தனது நண்பர்களிடம் “நாளை இந்தி ஆட்சி மொழி ஆகிறது. இது துக்க தினம். கறுப்புச் சின்னம் அணியப்போகிறேன்” என்று கூறியிருக்கிறார்.**

**1965ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் விடியற்காலை நான்கு மணியளவில், வீட்டிற்கு எதிரே உள்ள மைதானத்தில் “உயிர் தமிழுக்கு; உடல் தீயிக்கு – தே.மு.சிவலிங்கம்” என்று எழுதி வைத்துவிட்டு, தீக்குளித்து உயிர் துறந்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**